அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



New No.46,Old,No.4,Ramakrishna Street,
(North Usman Road)T.Nagar,Chennai-6000117.

044-28143306 / 28143307 / Fax 42124624

www.aismk.in

அ.எண்.213/2015

தேதி.4.9.2015

# வ.உ.சி பிறந்தநாள் விழா
# ச.ம.க. தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
# நெல்லையில் சிலைக்கு மாலை அணிவிக்கிறார்

'செக்கிழுத்த செம்மல்', 'கப்பலோட்டிய தமிழன்' என்றெல்லாம் பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரிய வ.உ.சிதம்பரனார் அவர்களின் பிறந்த நாளை நாடே போற்றிக் கொண்டாடுகிறது. வெள்ளையரின் ஆதிக்கத்தை எதிர்த்து, துணிச்சலோடு போராடி, கப்பல் சேவை செய்த காரணத்தாலும், தொழிலாளர்களை ஒன்று திரட்டி அவர்களது உரிமைகளுக்காக போராடிய காரணத்தாலும், ஆங்கிலேய அரசால் சிறைபிடிக்கப்பட்டு பெரும் அவதிக்குள்ளாகி மறைந்த மாபெரும் தியாகி வ.உ.சி.

*அவரது பிறந்த தினமான 5.9.2015 நாளை காலை 10 மணியளவில் வ.உ.சி.அவர்களின் மணிமண்டபத்தில் உள்ள அவரது சிலைக்கு புரட்சித் திலகம் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அவர்கள் மாலை அணிவிக்கிறார். அவருடன் கட்சி நிர்வாகிகளும், தொண்டர்களும் திரளாகக் கலந்துகொள்கிறார்கள். இந்நன்னாளில் அவரது தியாகங்களை நினைவு கூறுவதோடு மட்டுமின்றி, அவரது வழியில் நாட்டுப் பற்று உணர்வோடு சமத்துவ சமுதாயம் மலர அனைவரும் பாடுபடுவோம் என்ற உறுதிமொழி ஏற்போம். வ.உ.சி அவர்களின் புகழ் எந்நாளும் நிலைத்து நிற்க அயராது பணியாற்றுவோம்*

*நன்றி, வணக்கம்,*

*உழைப்பவரே உயர்ந்தவர்,*

*என்றும் அன்புடன்,*



*ஆர்.சரத்குமார் எம்,எல்.ஏ*

*தலைவர்.*